## 3.1 மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் கூட்ட நடவடிக்கை தொடங்கும் முன் ஒரு திருக்குறளையும் அதற்கான கருத்தையும் கூறுவதற்கு அறிவுரை வழங்குதல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி3) துறை

அரசாணை (2ப) எண்.59 நாள் : 19.9.2007

படிக்க :

தனி அலுவலர், முதலமைச்சர் தனிப்பிரிவு கடிதம் எண்.எப்/63310/DG/A32.2007–1 நாள் 2.3.2007

**ஆணை**

திரு அழகர்சாமி, தென்னம்பட்டி, வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், நகராட்சிகள், ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் கூட்ட நடவடிக்கை தொடங்கும் முன்பு ஒரு திருக்குறளையும் கூறி அதற்கான கருத்தையும் கூறி பின் கூட்ட நடவடிக்கையைத் தொடங்கலாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அதன்படி மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் கூட்டங்களில் கூட்ட நடவடிக்கையைத் தொடங்கும் முன்பு ஒரு திருக்குறளைக் கூறி அதற்கான கருத்தையும் கூறிய பின்னர் கூட்ட நடவடிக்கையைத் தொடங்குமாறு அரசு ஆணையிடுகிறது. அனைத்து மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பணிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்